# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2141/78 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20

2141/78 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 21/78 (XVI) (A)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2019, செத்தெம்பர் 18.

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம், 2019 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப் பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டமானது (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ (1) என்னும் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்டதும், (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்)2019 ஆம் ஆண்டின் 2141/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.


1A - PG 4649 - 107 (2019/09)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இந்நிறுவகமானது, இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்)

4. சட்டத்தின், கட்டளைச் சட்டத்தின் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமையவும் (இதனகத்துப் பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பனவற்றுக்கு அமையவும் நிறுவகமானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் நிறுவகத்தின் விதப்புரையின் மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மருத்துவ கல்வியின் சிறப்புக்கூறுகளில் அறிவுறுத்தலுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் மற்றும் ஆராய்ச்சிக்கும் ஏற்பாடு செய்தல்;

(இ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் மருத்துவக் கல்வியின் சிறப்புக்கூறுகளில் விசேட துறைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் மற்றும் தகைமைகள் பற்றித் தீர்மானித்தலும் ;

(ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு மருத்துவக் கல்வியின் சிறப்புக்கூறுகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கங்களுக்கென பரீட்சைகளை நடாத்துதலும், அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்திருப்பதோடு நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்தி செய்துள்ள ஆட்களை பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள், விசேட அங்கீகாரம் (சிறப்புக்கூறுகளில் சபை சான்றுப்படுத்துகை) மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் வழங்குவதற்கு, தகுதியுடையவரென விதந்துரைத்தலும்;

(உ) ஆசிரியர்கள், கல்விமான்கள், மாணவர்கள் ஆகியோரைப் பரிமாற்றுவதன் மூலம் அல்லது வேறுவகையில் நிறுவகத்தின் நோக்கங்களோடு ஒத்த அல்லது கணிசமான அளவு ஒத்த நோக்கங்களைக் கொண்டவையும் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையுமான பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைத்தலும்;

(ஊ) துணைவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக நிறுவகத்திற்கு அனுமதிகோரும் ஆட்களினால் சித்தியடைந்த பரீட்சைகள், பெறப்பட்ட தகைமைகள் மற்றும் கற்கைக் காலப்பகுதி அல்லது பின்பற்றப்பட்ட கற்கைநெறி ஆகியவற்றையும் நிறுவகத்தின் அத்தகைய பரீட்சைகளுக்கும் மற்றும் கற்றல் அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அவற்றின் அத்தகைய பாகங்கட்கும் சமமானதென அங்கீகரித்தலும் எந்நேரத்திலும் அத்தகைய அங்கீகாரத்தைக் கைமீட்டலும்;

(எ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படக்கூடியவாறான கல்விசார், நிருவாக மற்றும் வேறு பதவிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தலும் அத்துடன் அவற்றை இல்லாமல் செய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தலும்;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக நிறுவனம்சார், பயிற்சி, பிணிசார் சேவை அல்லது ஆராய்ச்சிக்காக தேவைப்படும் நூலகங்களை, ஆய்வுகூடங்களை, வகுப்பறைகளை, வைத்தியசாலைகளை மற்றும் வேறு கட்டிடங்களை நிறுவுதலும் அவற்றிற்கு வசதியளித்தலும் அவற்றைப் பேணுதலும்;

(ஐ) ஆதரவுப் பணம், புலமைப்பரிசில், ஏழைக் கல்வி உதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் ஆகியவற்றை வழங்குதலும்;

(ஒ) பல்கலைக்கழகம் மற்றும் நிறுவகத்திற்கு வெளியே உள்ள இடங்களில் ஆராய்ச்சி மற்றும் கற்கை நெறிகள் அல்லது கற்கை நெறிகளின் பாகங்களை நடாத்துவதற்கு, அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் துணைவிதிக்களுக்கிணங்க ஒழுங்கு ஏற்பாடுகள் செய்தலும்;

(ஓ) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும், பயிற்றுவிப்பாளர்களாகவும் மற்றும் பரீட்சகர்களாகவும், நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆட்களை பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் ஏற்று அங்கீகரித்தலும்;

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு வேறு அதே நிறுவகங்களுடன் கூட்டுச் சேர்த்தல்;

(க) அரசாங்க கொள்கைகள் மற்றும் அதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட ஏதேனும் விதிக்கிணங்கவும் கட்டணங்களை கோருதலும் பெறுதலும்;

(ங) நிறுவகத்தின் தத்துவங்களை, பணிகளை கடமைகளை பிரயோகிப்பதன்மேல், புரிவதன்மேல், நிறைவேற்றுவதன்மேல் இடைநேர்விளைவானதாயினுஞ்சரி அல்லது விளைவாந்தன்மையின வாயினுஞ்சரி அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்தலும்;

5. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர்;

(ஆ) பிரதிப் பணிப்பாளர்; அத்துடன்

(இ) இப்பந்தியின் நோக்கங்களுக்காக எந்தப் பதவியை வகிப்பவர் அலுவலர் ஒருவராக உள்ளவரோ அந்தப் பதவியொன்றாக உள்ளதெனக் கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

6. (1) முதலாவது பணிப்பாளர் பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அடுத்துறும் ஒவ்வொரு பணிப்பாளரும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பந்தியின் கீழ் அமைத்துருவாக்கப்படும் நிறுவகத்தின் முகாமைச் சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களின் குழாம் ஒன்றிலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும் ஆளெவரும், இரண்டுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(3) ஒரு உயர்கல்வி நிறுவனத்தின் அல்லது ஒரு உயர்கல்வி நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவகம் பணியாளரின் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் அத்தகைய உறுப்பினரை விடுவித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அவரது (5) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் தனது ஓய்வு பெறும் வயதைப் பூர்த்தி செய்யும் வரை இவற்றுள் என்நிகழ்வு முன்னதாக இடம்பெறுகின்றதோ அதுவரை பதவிவகித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டு பங்குக்கு குறையாதோரால் மேல் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின் மேல் அந்நோக்கத்திற்காக கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். பிரதிப் பணிப்பாளர் அத்தகைய விசேட கூட்டத்திற்கு தலைமை தாங்குதல் வேண்டும். பிரதிப் பணிப்பாளர் சமூகமளிக்காவிடின் அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்த உறுப்பினர்கள் அத்தகைய விசேட கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கு தம்மிடையே இருந்து ஆளொருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) பணிப்பாளர், பல்கலைக்கழகத்தின் பேரவையின் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு அமைந்தவராதல் வேண்டும்.

(7) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்ட அல்லது தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்த பணிப்பாளர் ஒருவர், பணிப்பாளராக தனது நியமனத்திற்கு உடன் முன்னர் உயர்கல்விசார் நிறுவனம் ஒன்றின் அல்லது உயர்கல்விசார் நிறுவகமொன்றின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவராக இருந்தால், அத்தகைய உயர் கல்விசார் நிறுவனத்தில் அல்லது உயர்கல்விசார் நிறுவகத்தில் தனது நிலையான பதவிக்கு திரும்பிச் செல்லலாம். ஆயின், அவர் இளைப்பாற்று வயதை அடைந்திருத்தலாகாது.

(8) பணிப்பாளர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறு காரணத்திற்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக இருக்குமிடத்து, பிரதிப் பணிப்பாளர் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகிய இருவரும் இயலாதவராகவிருக்கும் பட்சத்தில், ஆணைக்குழுவானது, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், பணிப்பாளரின் பதவியின் கடமைகளைக் கொண்டுநடாத்துவதற்காகத் தகுதியானவையென அது கருதக் கூடியவாறாக அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும்வரை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, பதவியின் வழமையான கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(9) பணிப்பாளரின் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுமிடத்து, நிரந்தர நியமனம் ஒன்று (1) ஆம் உட்பந்தியின் கீழ் செய்யப்படும் வரை பிரதிப் பணிப்பாளர், பணிப்பாளர் பதவியின் அத்தகைய கடமைகளை நிறைவேற்றுதல் வேண்டும். பிரதிப் பணிப்பாளர் அவ்வாறு செய்வதற்கு இயலாதவராக இருக்கின்றவிடத்து, ஆணைக்குழுவானது அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள், நிரந்தரமான நியமனமொன்று (1) ஆம் உட்பந்தியின் கீழ் செய்யப்படும்வரை பணிப்பாளரின் பதவியின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படும் வரை, பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பதவியின் வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(10) பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும், என்பதுடன் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் அதன் பிரதான கல்வி அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர், சபையின் பதவிவழி உறுப்பினராகவும் ஒவ்வொரு கற்கைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். அவர், நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகாரசபையின் அல்லது குழுவின் ஏதேனும் கூட்டத்தைக் கூட்டுவதற்கும், அதில் சமுகமாயிருப்பதற்கும் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராகவிருந்தாலொழிய, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(11) சபையினால் அல்லது ஒவ்வொரு கற்கைச் சபையினால் அதற்கென பணிப்பாளருக்கு காலத்துக்குக் காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, கட்டளைச் சட்டத்தினதும், சட்டத்தினதும் அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள் அவை நிறுவகத்துடன் தொடர்புபட்ட அளவுவரை உரியமுறையில் கடைப்பிடிக்கப்படுகின்றது என்றும் சபை மற்றும் ஒவ்வொரு கற்கைச் சபையின் முடிவுகளுக்கு பயன்கொடுக்கப்படுகின்றது என்றும் உறுதிப்படுத்துவது அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன் அந்நோக்கத்திற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

(12) சபையினதும் மற்றும் கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் முடிபுகளுக்கு பயன்கொடுப்பது அல்லது பயன்கொடுக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(13) பணிப்பாளர் ஆனவர் நிறுவாகத்தின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(14) பணிப்பார், நிறுவகத்தினுள் கற்கைநெறி, நிருவாகம் மற்றும் கல்விசார் தரம் மற்றும் நியமங்களைப் பேணுவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

7. (1) பிரதிப் பணிப்பாளர் ஆனவர் அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு ஒன்றினால் செய்யப்பட்ட சமர்ப்பிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு சபையினால் விதந்துரைக்கப் பட்டவாறு பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் நிறுவகத்தின் முழுநேர அலுவலராதல் வேண்டும்.

(2) உயர்கல்வி நிறுவனம் ஒன்றின் அல்லது உயர்கல்விசார் நிறுவகத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவர் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவகம் பிரதிப் பணிப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் அத்தகைய உறுப்பினரை விடுவித்தல் வேண்டும்.

(3) பிரதிப் பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது (3) ஆம் உட்பந்தியின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அவரது நியமனத் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் தமது ஓய்வுபெறும் வயதை பூர்த்தி செய்யும் வரை இவற்றுள் எந்நிகழ்வு முன்னதாக இடம்பெறுகின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(4) பிரதிப் பணிப்பாளர், அந்நோக்கத்திற்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கின்மீது பேரவையினால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(5) பிரதிப் பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும் பணிப்பாளருடனான கலந்தாலோசனையுடன் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளரின் பணிப்புடனும் கட்டுப்பாட்டின்கீழும் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

8. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(அ) சபை;

(ஆ) சபை மற்றும் கற்கைச் சபைகள்; அத்துடன்

(இ) அத்தகைய அதிகார சபைகளாகவிருப்பதற்கென கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

9. (1) சபையானது நிறுவகத்தின் கல்விக் குழுவாகவும் நிறைவேற்றுக் குழுவாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்:

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது:

(அ) பணிப்பாளர்;

(ஆ) பிரதிப் பணிப்பாளர்;

(இ) பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களினதும் பீடாதிபதிகள்;

(ஈ) உயர் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(உ) சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ஊ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(எ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(ஏ) நிறுவகத்தின் உடன் கடந்தகால பணிப்பாளர்; அத்துடன்

(ஐ) கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் அல்லது அவரது நியமத்தர்.

(ஆ) பின்வரும் வேறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், அதாவது:

(அ) ஆணைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஐந்து ஆட்கள்;

(ஆ) துறைத் தலைவர்கள் அல்லது பீட பேராசிரியர்கள் ஆகியோரிடையேயிருந்து பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்;

(இ) பேரவையின் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்; அத்துடன்

(ஈ) கல்வி, சட்ட, உயர்தொழில், விஞ்ஞான, கைத்தொழில், மருத்துவ அல்லது நிருவாக செயலலகுகளில் சிறப்புச் சேவையாற்றிய ஆட்களிடையேயிருந்து சபையின் விதப்புரையின் மீது பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(2) சபையானது, குறித்த நோக்கம் ஒன்றிற்கு மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றிற்கு எவரேனும் ஆளை கூட்டுச்சேர்க்கலாம். ஆனால் அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட ஆளொருவரும் தேர்தலில் நிற்பதற்கு அல்லது ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரிமை கொண்டிருத்தல் ஆகாது;

10. (1) சபையின் தவிசாளராக பணிப்பாளர் இருத்தல் வேண்டும். அவர் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், ஒரு கூட்டத்தில் தலைமைதாங்க இயலாதவராக இருப்பின், பிரதிப் பணிப்பாளர், அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்குதல் வேண்டும். பிரதிப் பணிப்பாளர் ஒரு கூட்டத்தில் தலைமைதாங்க இயலாதவராக இருப்பின் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்கவென சமுகமாயிருந்த எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, விடயத்திற்கேற்ப அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனத் திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுகள் ஒன்றிற்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீள தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர்பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர் அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக் காலத்தின் முடிவுறாத எஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின், மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் எவ் அந்தஸ்த்தின் அல்லது எவ் உறுப்பாண்மையின் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு தகவுடையவராக இருந்தாரோ அவ் அந்தஸ்த்தை அல்லது உறுப்பாண்மையைக் கொண்டிருக்கும் வரை மட்டும் அப்பதவியை வகித்தல் வேண்டும்.

(3) சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிட்டு தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(4) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், ஆணைக்குழுவின் தவிசாளருக்கு சபைக்கு அவை நியமித்த இயைபான நிறுவனத்தின் தலைவருக்கு முகவரியிட்டு தமது கைப்படக் கடிதம் எழுதுவதன் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் வராமைக்கான லீவு இன்றி சபையின் அடுத்துறும் மூன்று கூட்டங்களிற்கு சமுகமளிக்கத்தவறின் சபையின் உறுப்பினர் என்ற தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படல் வேண்டும். அத்துடன் அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இயைபான அதிகாரசபை தக்கவோர் ஆளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(6) சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படி செலுத்தப்படல் வேண்டும்.

(7) சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், அதனது மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கினதாக இருத்தல் வேண்டும்.

(8) சபையானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் பத்து தடவைகளுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும் போதெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கிற்கு குறையாதவரிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப் பெறுவதன்மேல் ஒரு வாரத்தினுள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

11\. (1) கட்டளைச் சட்டத்தினதும், சட்டத்தினதும் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையானது, நிறுவகத்திலுள்ள கல்வி, பிணிசார் பயிற்சியுடன் தொடர்பான பிணிசார் சேவை, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகள் மீதான கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பந்திகளினால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்கு பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்:

(அ) பல்கலைக்கழக பணிப்புகளுக்கமைய நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும் கட்டுப்படுத்துதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஆ) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகம் சம்பந்தமாக எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துதலும் தீர்மானித்தலும்;

(இ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையடைவில் வைக்கப்பட்ட ஏதேனும் நிதிகளை பல்கலைக்கழக ஒருப்பாட்டுடன் நிருவகித்தல்;

(ஈ) நிறுவகத்திற்கு செய்யப்பட்ட மரண சாதனக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் மானியங்களை பல்கலைக்கழக ஒருப்பாட்டுடன் பெற்றுக் கொள்ளுதலும் ஏற்றுக் கொள்ளுதலும்;

(உ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக்கணக்குக் கூற்றையும் பரிசீலித்தலும் அவற்றை பல்கலைக்கழகம் மற்றும் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பித்தலும்;

(ஊ) நடைமுறை மற்றும் தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கான நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவிற்கும் சமர்ப்பித்தலும்;

(எ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையுடன் அல்லது கற்கைச் சபைகளுடன் கலந்தாலோசித்து மருத்துவக் கல்வியின் பல்வேறு சிறப்புக் கூறுகளில் வழங்கப்படவேண்டிய பட்டப்பின் படிப்பு பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகிய வற்றையும் அத்தகைய பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விச் சிறப்புக்கள் ஆகியவற்றுக்கு தகைமை பெற விரும்பும் மாணவர் பின்பற்றவேண்டிய கற்கை நெறி களையும், பயிற்சியையும், சித்தியடைய வேண்டிய வேறு பரீட்சைகளையும், திருப்தி செய்யவேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரைத்தல்;

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ அக்கருமத்திற்காக துணைவிதிகளை வரைதலும் சட்டமாக்கப்படுவதற்காக பேரவைக்கு அத்தகைய துணை விதிகளை சமர்ப்பித்தலும்;

ஆயின், எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட கற்கை சபை அல்லது கற்கைச் சபைகளிடமிருந்தான அறிக்கைகளை சீர்தூக்கிப் பார்த்த பின்னர் அன்றி கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான துணைவிதி எதுவும் வரையப்படலாகாது;

(ஐ) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையிடமிருந்தான அல்லது கற்கைச் சபைகளிடமிருந்தான அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் நிறுவகத்தின் கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் அத்துடன் விசேட நிபுணத்துவமுடைய ஆட்களை ஏற்றங்கீகரிப்பதுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை வரைதலும் மற்றும் (இதனகத்துப்பின்னர் "மூதவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மூதவைக்கு அத்தகைய ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்தலும்;

(ஒ) எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டும் என அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமத்துக்காக விதிகளை வரைதலும் அத்துடன் அத்தகைய விதிகளை சட்டமாக்குவதற்காக பேரவைக்கு அல்லது மூதவைக்கு சமர்ப்பித்தலும்;

(ஓ) நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு தேவைப்படும் வளவுகள், கட்டிடங்கள், தளபாடங்கள், சாதனங்கள் மற்றும் வேறு பொருட்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்தல்;

(ஔ) பின்வருவோரை பேரவைக்கு விதந்துரைத்தல்:-

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படுத்தக் கூடியவாறான சிரேஷ்ட பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் வேறு கல்விசார் பதவிகள்; அத்துடன்

(ii) நிறுவகத்திற்கென நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்கள், பரீட்சையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்கள்;

(க) நிறுவகத்திலுள்ள மாணவர்கள் அல்லது தொழிலுக்கு அமர்த்தப்பட்ட ஆட்களை இடைநிறுத்துவதற்கு அல்லது பதவியிலிருந்து நீக்குவதற்கு பேரவைக்கு விதந்துரைத்தலும் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தலும்;

(ங) நிறுவகத்தின் ஆசிரியர்களாக, பயிற்றுவிப்பாளர்களாக மற்றும் பரீட்சகர்களாக இனங்காணப் படும் தகவுடைய ஆட்களை பேரவைக்கு விதந்துரைத்தல்;

(ச) சம்பந்தப்பட்ட கற்கைச் சபையிடமிருந்தான அல்லது கற்கைச் சபைகளிடமிருந்தான அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னர் பல்கலைக்கழகத்தின் பின்வருவனபற்றி விதந்துரைத்தல் :-

(i) இப்பொழுதுள்ள கற்கைச் சபைகளை மீளவமைப்பதற்கும் புதிய கற்கைச் சபைகளைத் தாபிப்பதற்குமான திட்டங்கள்; அத்துடன்

(ii) மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறுகளை அந்தந்தக் கற்கைச் சபைகளுக்கு குறித் தொதுக்குதல்;

(ஞ) தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான அத்தகைய நிலையிற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமித்தலும், அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தலும், அத்தகைய குழுக்களின் அறிக்கைகளை சீர்தூக்கிப் பார்த்தலும் அத்துடன் அத்தகைய அறிக்கைகளை திரிபுபடுத்தலுடனோ அல்லது திரிபுபடுத்தல் இன்றியோ ஒன்றில் அதனை அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும்;

(ட) சம்பந்தப்பட்ட கற்கைச்சபையின் அல்லது கற்கைச்சபைகளின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் கற்கை நெறிகட்கு மாணவரை அனுமதிப்பதற்கான கட்டளைக் கல்லை தீர்மானித்தலும்;

(ண) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச்சட்டத்தின் 20ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் நியதிகளின்படி ஏதேனும் பிணைப்பொறுப்பில் முதலீடு செய்தலும் அல்லது பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும் அல்லது பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும்; அத்துடன்

(த) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிருவகத்தின் தத்துவங்களிற்கு இடைநேர்விளைவான அல்லது அவற்றின் மீது விளைவாந்தன்மையினதாக இருக்கின்றதான நிறுவகத்தின் வேறு எல்லாத் தத்துவங்களைப் பிரயோகித்தலும்.

(3) சம்பந்தப்பட்ட கற்கைச்சபை அதனது அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை முதலில் கொடுத்திருந்தாலொழிய ஏதேனும் கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் சபையினால் நிறைவேற்றப்படுத்தலாகாது.

ஆயின், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதுவும் செயற்படுத்தப்படலாகாது.

இப்பந்தியில் “கல்விசார் விடயம்” என்பது, சம்பந்தப்பட்ட கற்கைச்சபையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுவான பணிப்புக்கும் அமைந்த ஏதேனும் விடயம் என்று பொருளாகும்.

12. (1) பின்வரும் மருத்துவக் கல்விச் சிறப்புக்கூறுகள் ஒவ்வொன்றிற்கும், அத்துடன் எந்த மருத்துவக்கல்வி விசேட கூறுகளில் கற்பித்தல் மற்றும் பயிற்சி, சபையினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுவதாக உட்கருதப்படுகின்றதோ அந்த வேறு மருத்துவக் கல்வி சிறப்புக்கூறுகள் ஒவ்வொன்றிற்கும் நிறுவகம், கற்கைச் சபைகளைத் தாபித்தல் வேண்டும்:-

(அ) பிணிசார் விஞ்ஞானங்கள்;

(ஆ) அடிப்படை மருத்துவ விஞ்ஞானங்கள்;

(இ) பிரயோக மருத்துவ விஞ்ஞானங்கள்; அத்துடன்

(ஈ) சுகாதார விஞ்ஞானங்கள்

(2) கற்கைச் சபையானது நிறுவகத்தின் பிரதான கல்விக்குழு ஆதல் வேண்டும்.

(3) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையானது வலிதான ஏதேனும் காரணங்களுக்காக கற்கைச்சபை ஒன்றிற்கு அல்லது விசேட சபை ஒன்றிற்கு நியமிக்கப்பட முடியாதவிடத்து

சபையானது அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை வாய்ந்த ஆட்களை நியமிப்பதற்கான தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டு பங்கிற்கு குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது கற்கைச்சபைகள் அல்லது விசேட சபைகள் என்பவற்றைக் கலைப்பதற்கு தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

13. (1) கற்கைச்சபை ஒவ்வொன்றும் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர்

(ஆ) பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மருத்துவக் கல்வியின் இயைபான விசேடகூறு அல்லது வேறு விசேட கூறுகளிலிருந்து; அத்துடன் பல்மருத்துவ பட்டப்பின் படிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் விடயத்தில் பல்கலைக்கழக பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்திலிருந்தும் மூன்று உறுப்பினர்கள்;

(இ) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு மருத்துவ பீடங்களிலிருந்து மருத்துவக் கல்வியின் இயைபான விசேடகூறு அல்லது வேறு விசேடகூறுகளில் உள்ளவரும் பீடாதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வருமான ஒரு சிரேஷ்ட பேராசிரியர், (தவிசு) பேராசிரியர், இணைப் பேராசிரியர், தலைவர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர்

(ஈ) இயைபான பயிற்சி நிலையங்கள், நிறுவகங்கள், பீடங்கள் மற்றும் கற்கைத் துறைகள் ஒவ்வொன்றிலுமிருந்தான பிரதிநிதி ஒருவர்;

(உ) தொடர்பட்ட பொது அல்லது தனியார் துறை நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற அல்லது சேவையாற்றியுள்ள சிறந்த சிரேஷ்ட கல்வியாளர்கள் அல்லது ஆலோசகர் களிடையேயிருந்து சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்

(2) ஏதேனும் கற்கைச்சபை, சபையின் ஒருப்பாட்டுடன் குறித்தவொரு நோக்கத்திற்காக குறித்தவொரு காலப்பகுதிக்கு ஆள் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரான எண்ணிக்கையினரான ஆட்களை கூட்டுச் சேர்க்கலாம். அவ்வாறு கூட்டுச் சேர்க்கப்பட்ட ஆளெவரும் தேர்தலில் நிற்கவோ அல்லது அத்தகைய கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) (அ) சபையின் எவரேனும் உறுப்பினர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அவர் விடயத்திற்கேற்றவாறு அவருடைய நியமனத் தேதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்று ஆண்டுகள் காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயினும் எவ்வாயினும் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவடையு முன்னர் அவரது பதவியை வறிதாக்கியிருப்பின், அவரை அடுத்துறுபவர், முன்னரே அவரது பதவியை வறிதாக்கியிருந்தாலன்றி அவருக்கு முன் இருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்கு பதவிவகித்தல் வேண்டும்.

ஆயின் மேலும் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரும் எவ் அந்தஸ்து அல்லது எவ்வுறுப்பாண்மையின் பயனைக்கொண்டு கற்கைச்சபையின் உறுப்பினர் ஒருவராக நியமனம் பெறுவதற்கு தகவுடையவராக இருந்தாரோ அவ்வந்தஸ்தை அல்லது அவ்வுறுப்பாண்மையை அவர் கொண்டிருக்கும்வரை பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பயிற்சி அலகு, நிலையம், பல்கலைக்கழகம், பீடம் அல்லது கற்கைத்

துறையிலிருந்தான பதவி துறப்பதன்மீது, ஓய்வுபெறுவதன்மீது அல்லது இடமாற்றத்தின்மீது உறுப்பினர் ஒருவராக இருப்பது இல்லாதொழிதல் வேண்டும். கல்லூரிகள் மற்றும் கழகங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உறுப்பினர்கள் அறுபத்தைந்து வயதை அடைவதன்மீது உறுப்பினர் ஒருவராக இருப்பது இல்லாதொழிதல் வேண்டும்.

(ஆ) கற்கைச்சபை ஒன்றின் எவரேனும் உறுப்பினர் பணிப்பாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்பட கடிதம் எழுதுவதன்மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(இ) கற்கைச்சபை ஒன்றின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் வராமைக்கான அனுமதி இன்றி கற்கைச்சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு சமூகமளிக்கத் தவறின் கற்கைச்சபையின் உறுப்பினர் என்ற தனது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் பணிப்பாளர், ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்குபொருத்தமான ஆளொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச்சபையும் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து அதனது உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தவிசார் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு கற்கைச் சபையும் அதனது உறுப்பினர்களிடையேயிருந்து கற்கைச்சபையின் உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஏதேனும் கற்கைச்சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் கூட்டுச்சேர்ந்த உறுப்பினர்கள் (எவரேனும் இருப்பின்) நீங்கலாக மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கற்கைச்சபையும் அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும் ஓராண்டுக்கு பத்து தடவைகளுக்குக் குறையாத கூடுதல் வேண்டும்.

14. (1) கட்டளைச்சட்டத்தினதும், சட்டத்தினதும் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு கற்கைச்சபையும் எம்மருத்துவக்கல்விச் சிறப்புக்கூறுகளுடன் சம்பந்தப்பட்டதோ அம்மருத்துவக்கல்விச் சிறப்புக்கூறிலுள்ள கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சைகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுவான பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச்சபையும் (1) ஆம் உட்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி சம்பந்தப்பட்ட மருத்துவக்கல்வி சிறப்புக்கூறுகள் தொடர்பில் பின்வரும் தத்துவங்கள் கடமைகளை மற்றும் பணிகள் ஆகியவற்றை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:

(அ) சபையானது அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் ஒரு கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்தலும் அறிக்கையிடுதலும்;

(ஆ) மருத்துவக்கல்விச் சிறப்புக்கூறில் உள்ள கற்கைநெறிகள், கற்பிக்கும் நிகழ்ச்சித் திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் என்பன சம்பந்தமான எல்லாக் கருமங்கள் பற்றியும் சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல்;

(இ) சிறப்பான ஏதேனும் விடயத்தை அல்லது எவையேனும் விடயங்களை சீர்தூக்கிப் பார்த்து அதன்மீது அல்லது அவற்றின்மீது அறிக்கை இடும் நோக்கத்திற்காக கற்கைச் சபை உறுப்பினர்கள் அல்லாத வேறு ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தல்;

(ஈ) கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் ஆகியவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளை சபைக்கு விதந்துரைத்தல்;

(உ) இயைபான மருத்துவக்கல்வி சிறப்புக் கூறிலுள்ள கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதல்;

(ஊ) ஆசிரியர்கள் மற்றும் பரீட்சகர்கள் ஆக ஏற்றங்கீகரிப்பதற்கு பொருத்தமாக இருக்கின்ற வர்களான அத்தகைய ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல்;

(எ) சிறப்புப் பாடமாக ஏற்றங்கீகரிக்கப்பட வேண்டிய மருத்துவக் கல்வி இயைபான சிறப்புக் கூறில் விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள ஆட்களை சபைக்கு விதந்துரைத்தல்;

(ஏ) கற்கைநெறிகள், ஆதரவுப் பணம், புலமைப் பரிசில்கள், கண்காட்சிகள், ஏழைக்கல்வி உதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் ஆகியவற்றுக்கான போட்டிக்குரிய முறையையும் நிபந்தனைகளையும் சபைக்கு விதந்துரைத்தல்; அத்துடன்

(i) பின்வருவன பற்றி சபைக்கு விதந்துரைத்தல்:-

(i) தற்போதுள்ள கற்கைநெறிகளை மீள ஒழுங்கமைப்பதற்கும் புதிய கற்கைச் சபைகளைத் தாபிப்பதற்குமான திட்டங்கள்; அத்துடன்

(ii) அந்தந்த கற்கைச் சபைகளுக்கு மருத்துவக் கல்வியிலுள்ள சிறப்புக் கூறுகளை குறித்தொதுக்குதல்.

15. நிறுவகத்தின் நிதியாண்டு அரசாங்கத்தின் நிதியாண்டாதல் வேண்டும்.

16. (1) நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவக நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றில் இருந்து இந்நிதியத்திற்கு நிதி செலுத்தப்படுதலும் வேண்டும் -

(அ) தோதான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவகத்திற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) காலவரை ஈட்டுறுதி, மானியங்கள், கொடைகள் என்பவற்றிலிருந்தான வருமானம்;

(இ) பாராளுமன்றத்தினால் வழங்கப்படுவதும் பல்கலைக்கழகத்தினால் செலவு செய்யப்படுவதுமான பணங்கள் அல்லது நிறுவகத்தின் உதவியில் மானியம் என்றவகையான தரகு; அத்துடன்

(ஈ) எத்தன்மையினதான ஏதேனும் மூலத்திலிருந்து நிறுவகத்திற்கு திரளுகின்ற வேறு எல்லாப் பணங்களும்.

(2) தோதான அரசிறைத்தலைப்பின்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்டதும் குறிப்பிட்ட ஒரு மாதத்தின் போது செலுத்தப்பட்டதுமான பணத்தொகை எல்லாவற்றினதும் சுருக்கமும் அடுத்த தொடர்ந்துவரும் மாத முடிவுக்கு முன்னர் அதனது தகவலுக்காக ஆணைக்குழுவிற்கு பணிப்பாளரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

17. (1) பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்:

(அ) சபையால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் நிறுவகத்தின் கணக்குகளை வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்திற்கு செலுத்தப்படும் எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்துடன் முறையான கணக்குகளின் தலைப்புகளிற்கு அத்தகைய பணங்களை வரவு வைத்தலும்;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல்; அத்துடன்

(ஈ) பல்கலைக்கழகத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் தேவைப்படுத்துகின்றதான அத்தகைய மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடுகளையும் தொடர்ந்துவரும் ஆண்டுக் கான வருடாந்த நிதிசார் ஒதுக்கீடுகளையும் சபைக்கென தயாரித்தல்.

ஆயின் எவ்வாறாயினும் குறித்த நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட மானியக் கொடையிலிருந்து அல்லது அறக் கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் தனிவேறாகக் காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் கொடுப்பனவு எதுவும் நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் எந்தநோக்கத்திற்காக அல்லது குறிக்கோளிற்காக முறையாக அளிக்கப் பட்டதோ அந்த நோக்கத்திற்காக அல்லது குறிக்கோளுக்காக தவிர்ந்த வேறு நோக்கத்திற்காக குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து செலுத்தப்படுதலுமாகாது.

18. (1) நிறுவகமானது அதனது செயற்பாடுகள் தொடர்பான வருடாந்த கணக்குகளின் கூற்றையும் புள்ளி விபரங்களையும், பல்கலைக்கழகம் மற்றும் ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடிய தான அத்தகைய விபரங்களை கொண்டுள்ள அத்தகைய படிவத்திலும் முறையிலும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குகளின் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(3) நிறுவகமானது சட்டத்தின், கட்டளைச்சட்டத்தின், ஏதேனும் தோதான சாதனத்தின் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய நிதிசார் சுய அதிகாரத்தை பிரயோகித்தல் வேண்டும்.

19. உயர் கல்விசார் நிறுவனம் ஒன்றின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு இயைபானதாக இருக்கின்றதான சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

20. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது பல்கலைக்கழகத்தின் ஒருபாட்டுடனும், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அந்நிறுவனத்தின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை வினைத்திறனாக பிரயோகிப்பதற்கு புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அது அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் மற்றும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் விடயத்திற்கேற்ப அதனது சொந்த பணியாட்டொகுதி யிடையேயிருந்து பல்கலைக்கழகத்தினால் விடுவித்தன்மேல் வழங்கப்படுதல் வேண்டும். அல்லது ஆணைக் குழுவினால் அல்லது பல்கலைக்கழகத்தினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிப்பதற்கும் அல்லது அது தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவரை ஆசிரியரை அல்லது வேறு ஊழியரை முழுநேர சேவைக் காக விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து நிறுவகமானது, பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவிக்கான சம்பளம் மற்றும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகமானது பல்கலைக் கழகத்தின் கலந்தாலோசனை மற்றும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகளை அலுவலர், ஆசிரியர் அல்லது சம்பந்தப்பட்ட வேறு ஊழியருக்கு செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது பணிப்பாளரினதும் பல்கலைக்கழகத்தினதும் பணிப்புக்கும் ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்கும் அமைந்ததாதல் வேண்டும்.

21. எவரேனும் ஆள் உரியமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது கூட்டுச் சேர்க்கப்பட்டுள்ளாரா என்பது பற்றி அல்லது எவரேனும் ஆள் நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழுந்தால் அத்தகைய கேள்வி ஆணைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் அதன்மீது ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

22. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபை அல்லது வேறு குழுவின் சட்டம், தீர்மானம், அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் வெறுமனே அதன் உறுப்பினர்களின் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்ற காரணத்துக் காகவோ அல்லது அதன் எவரேனும் உறுப்பினரை நியமிப்பதில் ஏதேனும் குறைபாடு காரணமாகவோ செல்லுபடியற்றதாதல் ஆகாது.

23. இக்கட்டளை சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பல்கலைக்கழகமானது பட்டப்பின்பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் மருத்துவக்கல்வியின் பல்வேறு சிறப்புக் கூறுகளிலுள்ள கல்விசார் சிறப்புகளை வழங்குவதற்கும் அளிப்பதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும் நிறுவகத்தின் விதப்புரை மீது மட்டுமே பட்டப்பின் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் சிறப்புகள் என்பவற்றை பல்கலைக்கழகம் வழங்குதலும் அளித்தலும் வேண்டும்.

24. இக்கட்டளைச் சட்டத்திற்கான ஏதேனும் திருத்தம் சபையால், மூதவையால்,பேரவையால் மற்றும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

25. இக்கட்டளைச் சட்டத்தில்-

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்;

"தோதான சாதனம்" என்பது, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச் சட்டம், சுற்றறிக்கை, நியதிச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி எனப் பொருள்படும்;

"ஆணைக்குழு" என்பது, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"மருத்துவக் கல்வியின் விசேட கூறு" என்பது, காலத்துக்குக் காலம் நிறுவகத்தின் மற்றும் பல்கலைக்கழகத்தின் விதப்புரைமீது ஆணைக்குழுவில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் விசேட கூறு எனப் பொருள்படும்;

"ஆசிரியர்" என்பது, சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர், பேராசிரியர், இணைப்பேராசிரியர், சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I, சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை) மற்றும் எந்தப் பதவியை வகிப்பவர் ஆசிரியர் ஒருவராக உள்ளாரோ அந்தப் பதவி ஒன்றாக உள்ளதென கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பதவியை வகிப்பவர் ஆசிரியர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த பதவியை வகிப்பவர் எனப் பொருள்படும்.

10 - 138

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.